BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

திருக்குறள் குறிப்பிடும் கடவுளர்

Gods mentioned by Thirukkural

ந. தட்சணாமூர்த்தி M.A (தமிழ்),
அஞ்சல்துறை கணக்கு அதிகாரி (ஓய்வு)
பட்டுக்கோட்டை - 614602
மின்னஞ்சல்: ndmoorthy30@gmail.com
ORCHID ID: https://orcid.org/0009-0004-5055-1713

N. Dakshinamoorthy M.A (Tamil)
Accounts Officer (Retired), Dept. of Posts, Pattukottai- 614602

Abstract

Thiruvallur has mentioned many thingsconnected withGod.Remarks are found in Thirukkuralregarding Devas, individual deities, common deity, God and Brahman. This article summarises such mentionings.

Key words

Thiruvalluvar - Thirukkural- Devas - Deities - God -Brahman.

ஆய்வுச்சுருக்கம்

திருவள்ளுவர் கடவுள் தொடர்பான பல குறிப்புகளைத் திருக்குறளில் கூறியுள்ளார். தேவர்கள், தனித் தெய்வங்கள், பொதுவான தெய்வம், மேலான இறைவன், அதற்கும் மேலான பரம்பொருள் ஆகியவை பற்றிய குறிப்புகள் திருக்குறளில் உள்ளன. அவற்றை இக்கட்டுரை தொகுத்துக் கூறுகிறது.

திறவுச்சொற்கள்

திருவள்ளுவர் - திருக்குறள்-தேவர்கள்- தெய்வங்கள்- ஈசுவரன் - பரம்பொருள்.

முன்னுரை

திருவள்ளுவருக்குத் தெய்வப்புலவர் என்ற ஒரு பெயருண்டு. அவர் படைத்த திருக்குறளில் கடவுள் தொடர்பான பல கருத்துகள் கூறப்பட்டுள்ளன. கடவுளை மறுக்கும் கொள்கை உடையவர்கள் பலர் அத்தகைய குறள்களுக்குத் தங்கள் கொள்கைக்கேற்ப வேறுபட்ட பொருள் கூறுவர். அத்தகைய கருத்துகளை விடுத்து, மரபு வழியில் சான்றோர் கூறிய பொருளின் அடிப்படையில் கடவுள் தொடர்பாக திருக்குறளில் கூறப்பட்டுள்ளவற்றைத் தொகுத்துக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம்.

கடவுள் என்பதன் விளக்கம்

யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் மூன்றும் ஆபிரகாமிய மதங்கள் என்று கூறப்படும். இவை ஒரே கடவுள் கொள்கை (Monotheism) உடையவை. இக்கொள்கைக்கு மாறான பல தெய்வக்கொள்கையை(Polytheism) பின்பற்றும் சமுதாயங்கள்பல. இந்து மதம் பல தெய்வங்களையும் ஏற்றுக்கொள்ளும் அதே சமயத்தில் எல்லாத் தெய்வங்களும் ஒரே கடவுளின் வடிவங்களே என்ற கொள்கை (Henotheism) உடையது. இந்து மதத்தின் கொள்கைப்படி உலகை இயக்கும் தெய்வ சக்திகள் பல உள்ளன. இவை அனைத்தும் ஈஸ்வரன் என்ற பெருங்கடவுளின் கூறுகளே. இந்த ஈஸ்வரன் பிரபஞ்சம் முழுவதற்கும் அடிப்படையான பரம்பொருள் என்ற பிரம்மம் என்பதன் வெளிப்பாடே.

இவ்வாறு இந்துமதத்தில், பல தனித் தெய்வங்கள், அவற்றுக்கு அடிப்படையான ஒரே ஈஸ்வரன், அதற்கும் அடிப்படையான பிரம்மம் என்ற மூன்று நிலைகள் கூறப்பட்டுள்ளன. எனினும் கடவுள் என்ற சொல் இந்த மூன்று நிலைகளையும் குறிக்கப் பொதுவாகக் கூறப்படுதல் வழக்கத்தில் உள்ளது. இந்த மூன்றையும் பற்றியும் திருக்குறளில் கூறப்பட்டுள்ளது. இந்து மதத்தில், உலக வாழ்வில் விரும்பும் நன்மைபெற உரிய தெய்வங்களை வழிபடுவர். எடுத்துக்காட்டாக, இடையூறுகளை நீக்க விநாயகரும், கல்விக்கு சரசுவதியும், செல்வத்துக்கு இலக்குமியும், வீரத்துக்கு முருகனும் வழிபடப்படுவர். இத்தெய்வங்களுக்கு அடிப்படையான பரம ஈசுவரனாக சிலர் சிவனையும் சிலர் திருமாலையும் கருதுவர். இத்தகையசைவ, வைணவ வேறுபாடு திருவள்ளுவர் காலத்தில் பெரிதாக வளராததால் கடவுள், இறைவன் ஆகிய சொற்களே திருக்குறளில் பரமேசுவரனைக் குறிப்பதைக் காணலாம். பரமேசுவரனுக்கு அடிப்படையான பரம் பொருள் எனப்படும் பிரம்மம் குணங்களோ, ஆண் பெண் என்ற வேறுபாடோ அற்றது. அனைத்து உயிர்களும் உலகமும் இந்த பிரம்மத்தில் இருந்தே வந்துள்ளன என்பது உபநிடதங்களின் கொள்கை.

திருக்குறளில் தெய்வங்கள்

தனித் தெய்வங்களைப் பற்றிய பல குறிப்புகளைத் திருக்குறளில் காணலாம்.

திருமகளும் மூதேவியும்

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்" (குறள் - 84)
"அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்" (குறள் - 167)
"வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு" (குறள் - 519)
"மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்"(குறள் - 617)
"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு" (குறள் - 920)
"அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியால் மூடப்பட் டார்" (குறள் - 936)

இந்தக் குறள்களில் இலக்குமி தேவியும் மூத்த தேவியும் குறிப்பிடப்பட்டுள்ளனர். செய்யாள் (சிவந்தவள்), செய்யவள், தாமரையினாள், திரு (திருமகள்)என்ற பெயர்களால் திருமாலின் மனைவியான இலக்குமிதேவி குறிப்பிடப்பட்டுள்ளாள். தவ்வை (தமக்கை-திருமகளின்தமக்கை), மாமுகடி (கரியமுகமுடையவள்), முகடி என்ற பெயர்களால் ஜ்யேஷ்டா தேவி எனப்படும் மூதேவி குறிப்பிடப்படுகிறாள் (ஜ்யேஷ்டா - மூத்தவள்). தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது பாற்கடலில் திருமகள் தோன்றுவதற்கு முன்பாகத் தோன்றியதால் அவள் மூத்ததேவி எனப்படுகிறாள். முற்காலத்தில் மூத்த தேவிவழிபாடு இருந்துள்ளது. மூத்த தேவியின் சிலைகள், பல கோயில்களில் இடம் பெற்றுள்ளன.

திருமால்

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு" (குறள் - 610)
"தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு"(குறள் - 1103)

இந்தக் குறள்கள் திருமாலைக் குறிப்பிடுகின்றன. 'அடியளந்தான்' என்பது வாமனனாக வந்து மகாபலியிடம் மூன்றடி நிலம் கேட்டு மூன்று அடியால் மூவுலங்களையும் அளந்த திருமாலைக் குறிக்கும். சோம்பல் இல்லாத மன்னவன் மூன்று உலகங்களையும் வெல்வான் என்பது இக்குறளின் கருத்து. திருமாலுக்குத் 'தாமரைக் கண்ணான்' என்றும்பெயர். வட மொழியில், 'பத்மாக்ஷன்', 'பத்மலோசனன்', 'அரவிந்தாக்ஷன்', 'அரவிந்தலோசனன்' என்றெல்லாம் கூறுவர் (பத்மம், அரவிந்தம் - தாமரை, அக்ஷம், லோசனம் - கண்).

நான்முகன்

நான்முகன் எனப்படும் பிரம்மா படைப்புக் கடவுள் ஆவார். படைப்பது மட்டுமின்றி படைத்தவற்றின் விதியையும் வரையறுப்பவர் அவரே. 'பிரம்மா தலையில் எழுதிவிட்டான்', 'பிரம்மலிபி' என்றெல்லாம் கூறுவர் (லிபி - எழுத்து). சங்க இலக்கியங்கள் உலகைப் படைத்தவன் என்று நான்முகனைச் சுட்டுகின்றன.

'உருகெழு மாநிலம் இயற்றுவான்' (கலி. 106:18)

'படைத்தோன்மன்றஅப்பண்பிலாளன்' (புற. 194:5)

'ஐதேகம்மஇவ்உலகுபடைத்தோனே' (நற். 240:1)

என்பவை சங்க இலக்கியங்களில் நான்முகனைச்சுட்டும் குறிப்புகள்.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல்அரிது" (குறள் - 377)
"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்" (குறள் - 1062)

என்ற குறள்களில் 'வகுத்தான்', 'உலகு இயற்றியான்' என்ற பெயர்களால் நான்முகன் குறிப்பிடப்படுகிறான்.

முருகன், காளி, உமை முதலிய பிற தெய்வங்களைப் பற்றிய குறிப்புகள் திருக்குறளில் காணப்படவில்லை. அறம், பொருள், இன்பம் என்ற பால்களில் மிகவும் பொதுவான நோக்கில் இரத்தினச் சுருக்கமான முறையில் தன் நூலை வள்ளுவர் படைத்துள்ளார்.குறிப்பிட்ட இடத்தில் தேவையானது தவிர மற்றவை இடம் பெறுவது இல்லை. தமிழ் என்ற பெயர், சேர, சோழ, பாண்டியர் முதலிய மன்னர் பெயர்கள், நாட்டுப் பெயர்கள் எதுவும் திருக்குறளில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேவர்களும் இந்திரனும்

வானில் உள்ள சுவர்க்க உலகத்தில் தேவர்கள் இருப்பதாகவும் அவர்களின் அரசன் இந்திரன் எனவும் நூல்களில் கூறப்பட்டுள்ளது. அந்த உலகம் பருப்பொருளால் ஆன, புலன்களால் உணரக் கூடிய ஒன்றல்ல. புத்தேள், புத்தேளிர், வானோர், விண்ணோர் முதலிய சொற்கள் தேவரைக் குறிக்கும். வேள்விகளில் பெய்யப்படும் அவி (ஹவிஸ் -हविस्) இவர்களின் உணவு. எனவே இவர்கள் 'அவி உணவினோர்' என்று கூறப்பட்டுள்ளனர். இவர்கள் இறவாதவர் என்ற பொருளில் 'அமரர்' என்றும் கூறப்படுவர்(மர-मर; இறப்பு). இவர்களைப் பற்றிய பல குறிப்புகள் திருக்குறளில்காணப்படுகின்றன.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு" (குறள் - 18)
"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி" (குறள் - 25)
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள் - 50)
"பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு" (குறள் - 58)
"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு" (குறள் - 86)
"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்" (குறள் - 121)
"யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"(குறள் - 346)
"செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து" (குறள் - 413)

"புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை" (குறள் - 966)
"புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து" (குறள் - 1323)

இந்தக் குறள்களில் தேவர்களும் இந்திரனும் கூறப்பட்டுள்ளனர். சங்க இலக்கியத்தில் 'புத்தேளிர்'(புற. 22:35 மற். பிற), 'அவி உணவினோர்'(புற. 377:5) என்ற சொற்களால் தேவர்கள் குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

தேவர்கள் அமிர்தம் என்ற சாவா மருந்தை உண்பதால் இறவாமல் உள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது(அம்ருத - अमृत; ம்ருத- இறப்பு). தற்காலத்தில் அமிர்தம், அமுதம் என்று கூறப்படும் இச்சொல் பழந்தமிழில் அமிழ்தம் என்று கூறப்பட்டுள்ளது. இந்த அமிர்தத்தைப் பின்வரும் குறள்கள் குறிப்பிடுகின்றன.

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்" (குறள் - 64)
"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று" (குறள் - 82)
"அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்" (குறள் - 720)
"உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்" (குறள் - 1106)

நரகம்

வானுலகம் என்ற சுவர்க்க உலகத்துக்கு நேர் எதிரானது 'அளறு' எனப்படும் நரக உலகம். இது இருள் மயமானதாகக் கூறப்பட்டுள்ளது. திருக்குறளில் நரகமானது, பின்வரும் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்" (குறள் - 121)
"உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு" (குறள் - 255)
"ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு" (குறள் - 835)
"வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு" (குறள் - 919)

பொதுவான தெய்வம்

குறிப்பிட்ட ஒரு தெய்வத்தைக் கூறாமல் பொதுவாகத் 'தெய்வம்' என்று கூறுவதும் உலக வழக்கம். இது தனிப்பட்ட தெய்வங்களையும் குறிக்கும்; தேவர்களையும் குறிக்கும்; ஈசுவரனையும் குறிக்கும். இந்த வகையில் தெய்வம் என்பதை வள்ளுவர் பல குறள்களில் கூறியுள்ளார்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" (குறள் - 43)
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள் - 50)
"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (குறள் -55)
"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்" (குறள் - 619)

"ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்" (குறள் - 702)
"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்" (குறள் -)

என்ற குறள்களில் வள்ளுவர் பொதுவான தெய்வத்தைக் கூறியுள்ளார்.

ஈசுவரன்

தெய்வ சக்திகள் ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களில் தமக்கு உரியவற்றைச் செய்பவை. இந்த முத்தொழில்கள் ராஜதம், சத்வம், தாமசம் என்ற முக்குணங்களுக்கு உரியவை. முத்தொழில்களுக்கு உரிய பெருந்தெய்வங்களாக முறையே, பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகியோர் கூறப்பட்டுள்ளனர்.இவர் மூவருக்கும் மேம்பட்ட கடவுளாகக் கூறப்படுபவன் ஈசன் எனப்படும் ஈசுவரன். ஈசுவரனே பிரம்மாவாகப் படைத்தும், விஷ்ணுவாகக் காத்தும், ருத்திரனாக அழித்தும் முத்தொழில்களைப் புரிகிறான். ஈசுவரன் என்பவன் பிரம்மத்தினின்று வெளிப்பட்டுத் தோன்றும் தோற்றம் ஆவான். முக்குணம் எதுவும் அற்ற பிரம்மத்தில் முக்குண வேறுபாடுகள் தோன்றி உலக நிகழ்ச்சிகளைத் தோற்றுவிக்கும் போது அது ஈசுவரன் என்ற பெயர் பெறுகிறது. பிரம்மம் பற்றி வடமொழி உபநிடதங்கள் விரிவாகக் கூறுகின்றன. பிரம்மம் என்பது ஆண், பெண் என்ற தன்மை அற்றது. ஆனால் முத்தொழில்களைச் செய்யும் ஈசுவரன் என்ற இறைவன் ஆண் பாலாகக் கூறப்படுகிறான். முன்னது நிர்குண பிரம்மம் என்றும் பின்னது சகுண பிரம்மம் என்றும் கூறப்படுவது உண்டு.திருக்குறளின் கடவுள் வாழ்த்து ஈசுவரன் என்ற இறைவனையே போற்றுகிறது. 'ஆதிபகவன்', 'வாலறிவன்', 'இறைவன்', 'எண்குணத்தான்' ஆகிய பெயர்களால் ஆண் பாலாகவும், தாளை வணங்கும்படி வள்ளுவர் கூறும் காலடி கொண்ட உருவம் உடையவனாகவும் கூறப்படுபவன் முத்தொழில்களைப் புரியும் ஈசுவரனே. ஆபிரகாமிய மதங்களில் ஒரே கடவுளாகக் கூறப்படுபவன் இந்த ஈசுவரனே.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" (குறள் -)
"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" (குறள் - 388)

என்ற குறள்களில் கூறப்படுபவனும் ஈசுவரனே.

பரம் பொருள்

பரம்பொருள் குறித்த செய்திகள் திருக்குறளில் இடம்பெற்றிருக்கின்றன. "அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள் (புருஷார்த்தம்) நான்கையும் பற்றி திருக்குறள் முப்பால்களில் கூறியுள்ளது. வீடு பற்றி திருக்குறள் துறவறவியலில் கூறப்பட்டுள்ளது. இதைப் பற்றி விரிவாக இக்கட்டுரை ஆசிரியர் எழுதிய, 'அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருள் கூறும் திருக்குறள்' என்ற கட்டுரையில்" 1 காணலாம்.

எல்லா உயிர்களும் பிரம்மம் என்ற பரம்பொருளில் இருந்தே வந்துள்ளன. உயிர்கள் இன்ப, துன்பம் நிறைந்த, நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையில் சிக்கி உழல்கின்றன.இறந்த பின் பாவ, புண்ணியத்துக்கு ஏற்ப மறு பிறப்பு பெறுகின்றன. மீண்டும் மீண்டும் பிறந்து இறக்கும் இந்தப் பிறவிச் சுழலில் இருந்து விடுபட முடியாமல் உயிர்கள் துன்புறுகின்றன.பிறவிச் சுழலில் இருந்து விடுபட்டு மீண்டும் பரம்பொருளை அடைவதே வீடுபேறு எனப்படும். அதாவது இன்ப, துன்பம் நிறைந்த, நிலையற்ற உலக வாழ்வில் இருந்து விடுபட்டு ஆனந்தமான (இன்ப, துன்பம் அற்றநிலை), மாறுதலற்று நிலையான இறை நிலையை அடைவதே வீடுபேறு ஆகும். உயிர்கள் அடையக் கூடிய மிக உயர்ந்த நிலையாக இது கூறப்பட்டுள்ளது. உலக வாழ்க்கையைத் துறந்து, அவாவை அறவே நீக்கி பரம்பொருள் என்ற இறை நிலையை அடையும் முயற்சியில் ஈடு படுவதே துறவிகளின் நோக்கமாகும்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" (குறள் - 10)

என்று குறளில் வள்ளுவர் பிறவிச்சுழலைப் பெருங்கடல் என்று கூறி ஈசனின் திருவடிகளைத் துணையாகக் கொண்டவர் மட்டுமே பிறவிக்கடலைக் கடக்க முடியும் என்று கூறுகிறார்.

திருக்குறள் துறவறவியலில் துறவிகள் வீடுபேறு அடைவதற்கான நெறிகளை அவர் விவரிக்கிறார். உலகப் பொருள்களின் நிலையாமையை விளக்கிக் கூறும் வள்ளுவர், உலகப்பொருள்களைத் துறக்க வேண்டும் என்று கூறி, மெய்ஞ்ஞானத்தைப் உணர வேண்டும் என்று கூறி அவற்றுடன் அவாவை முற்றும் நீக்கினால் வீடுபேறு பெறலாம் என்பதை விளக்குகிறார்.

திருக்குறளின் துறவறவியல் துறவு நெறியை விளக்கும்போது பரம் பொருள் பற்றிக் குறிப்பிடுகிறது.

"பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு" (குறள் - 358)
"தூஉய்மை என்பது அவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்" (குறள் - 364)
"ஆராஇயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்" (குறள் - 370)

என்ற குறள்கள் துறவறவியலில் பரம்பொருளைப் பற்றியவை. இல்லறவியலிலும் பின்வரும் குறள் பரம்பொருள் பற்றிய குறிப்பைக் கொண்டுள்ளது.

"இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" (குறள் - 91)

இக்குறள்களில் 'செம்பொருள்', 'சிறப்பு', 'வாய்மை', 'பேரா இயற்கை' என்ற சொற்களால் பரம்பொருள் கூறப்பட்டுள்ளது.

பரம்பொருள் மட்டுமே செம்மையானது மற்றவை செம்மையற்றவை; தோன்றி மறைபவை என்பது இறை நூல்களில் கூறப்படும் கருத்து. எனவே திருக்குறள் பரம்பொருளைச் 'செம்பொருள்' என்று கூறுகிறது. அனைத்திலும் சிறந்தது பரம்பொருள் என்று இறை நூல்கள் கூறும்.எனவே பரம்பொருளைச் 'சிறப்பு' என்னும் சொல்லால் திருக்குறள் குறிப்பிடுகிறது. தொல்காப்பியமும் இவ்வாறே 'சிறந்தது' என்ற சொல்லால் பரம்பொருளைக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (தொல். பொருள்.190)

இங்கு 'சிறந்தது பயிற்றல்' என்பது பரம்பொருளை அடையும் நெறியைப்பயில்தல்2. துறவறம் பூணாமல் இல்லறத்தில் இருந்தபடியே பற்றுகளைத் துறந்து வீடுபேறு பெறுதல் என்பது ஒரு விதிவிலக்கான வழியாகும். மனு நூலிலும் இது கூறப்பட்டுள்ளது (மனு. 6.95, 6.96). கற்பு வாழ்க்கை (இங்கு மண வாழ்க்கையைக் குறிக்கும்) பற்றியவற்றைக் கற்பியலில் விளக்கும் தொல்காப்பியர் அகவை முதிர்ந்த காலத்தில் துறவறம் பூணாமல் இல்லத்தில் இருந்தவாறே வீடுபேறு பெறுதலில் ஈடுபடும் இந்த வழியையும் இல்லற வாழ்க்கைக்கு உரியதாகக் கூறியுள்ளார்.

பரம்பொருளை 'வாய்மை' என்ற சொல்லாலும் வள்ளுவர் குறிப்பிடுகிறார். பரம் பொருளின் தன்மைகளாக சத், சித், ஆனந்தம் என்ற மூன்றைக் குறிப்பிடுவர் (சச்சிதானந்தம்;சத் - உண்மையாகஉள்ளபொருள், சித்-அறிவுவடிவம், ஆனந்தம் - இன்ப, துன்பம்அற்றநிலை). பரம் பொருள் மட்டுமே உண்மையாக உள்ள பொருள்.மற்ற அனைத்தும் அதன் தோற்றங்களே என்று வேதாந்தம் கூறுகிறது. எனவே பரம்பொருளைச் 'சத்' என்ற உண்மைப் பொருளாகக் கூறுவர். அந்த அடிப்படையில் பரம்பொருளை 'வாய்மை' என்ற சொல்லால் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். பரம்பொருள் எந்த மாறுதலும் பெறாதது. மற்றவை அனைத்தும் மாற்றம் பெறுபவை என்று வேதாந்தம் கூறுகிறது. எனவே 'பேரா இயற்கை' என்ற சொல்லால் வள்ளுவர் மாறுதலற்ற பரம்பொருளைக் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை

திருவள்ளுவர் தன் நூலில் தேவர்கள் பற்றியும் தனித் தெய்வங்கள் பற்றியும் பொதுவான தெய்வம் பற்றியும் முத்தொழிலும் புரியும் ஈசுவரன் பற்றியும் அதையும் கடந்த பரம்பொருள் நிலை பற்றியும் கூறியுள்ளவற்றை மேலே கண்டோம். திருவள்ளுவர் மறைஞானம் நிறைந்தவர் என்பதால் அவர் தெய்வப்புலவர் என்று போற்றப்படுகிறார். மறை, தமிழ்மறை, உத்தரவேதம் (பின் தோன்றிய வேதம்) என்றெல்லாம் திருக்குறள் போற்றப்படுகிறது.

துணைநூல் பட்டியல்

1. கலித்தொகை
2. திருக்குறள்- பரிமேழலகர்உரை,சக்திகாரியாலயம், சென்னை, 1957.
3. தொல்காப்பியம்உரைவளம்கற்பியல், (பதி-ர்) சிவலிங்கனார், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை, 1993.
4. நற்றிணை.
5. புறநானூறு.

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.